
அம்சம்



முதல்வர்

கலைத்

தமிழ் இலக்கியம் ★ பொதுவுடைமை
அலுவலகம்
சென்னை-18.

20ம் அகம்

முதல்வர்

சிலையும்

பதிப்புரை

தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் 1975-ஆம் ஆண்டு ஜூலை முதல் நாள் அறிவித்த 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு நிறைவேற்றவில்லை என்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுத் தோல்வியடைந்தது.

அந்தக் கண்டனத் தீர்மான விவாதத்திற்குப் பதிலளித்து, முதல்வர் கலைஞர் அவர்கள் 30—10—75 அன்று சட்டப் பேரவையில் உரை நிகழ்த்தினார்கள். இவ்வுரையில் தமிழ்நாடு அரசு ஆற்றிவரும் அரும்பணிகள் குறித்து முதல்வர் அவர்கள் விளக்கியதை மட்டும், '20 அம்சம்' என்னும் தலைப்பில் தொகுத்துத் 'தமிழரசு' 16—11—'75 இதழின் இலவச இணைப்பாக வெளியிடுகின்றோம்.

—செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

20 அம்சம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்களே,

அருமை நண்பர் மாரிமுத்து அவர்களால் கொண்டு வரப்பட்டு — கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் கே. டி. கே. தங்கமணி அவர்களால் வழிமொழியப் பெற்று இந்த அவையின் விவாதத்திற்கு உட்பட்ட கண்டனத் தீர்மானம் குறித்து இருபதுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மாரிமுத்து அவர்கள் மெத்தப் பெருந்தன்மையோடு— அவர்கள் கூறிய கருத்துக்கள் நம்மால் ஏற்றுக் கொள்ளப் படக் கூடியவைகளா அல்லவா என்ற நிலைமை இருந்த போதிலும்— தன்னுடைய உரையை இங்கே நிகழ்த்தினார்.

கே. டி. கே. அவர்களும் மிக்க நிதானமாக இந்தக் கண்டனத் தீர்மானத்தில் தன்னுடைய கருத்துக்களை எடுத்து வைத்து— மாநில அரசின் மீது அவர் சாட்ட வேண்டிய குற்றங்கள் என்றாலும், அல்லது மத்திய அரசின் போக்கில் அவருக்குப் பிடிக்காத அம்சங்கள் இருந்தாலும் அவைகளையும் மிக்க நிதானமாக எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.

கண்டனத் தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்று அதற்கான மரபு கடைப்பிடிக்கப்பட்டு, இதுபோன்ற தீர்மானங்கள்வருவதற்கு எத்தனைஉறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள் என்கிற எண்ணிக்கையின் அடிப்படைக்குத் தாங்கள் உதவியதாகக் கூறி— ஆனால் கண்டனத் தீர்மானத்திற்கு மாறுபட்ட கருத்துக்களை நம்முடைய நிறுவன காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களும்— சுதந்திரா கட்சியின் சட்டப் பேரவைத் தலைவர் நண்பர் வெங்கடசாமி அவர்களும் — நடுநிலையோடு தாங்கள் இந்தத் தீர்மானத்திலே இருக்கப் போவதாகச் சொல்லி மிக உருக்கமான ஆனால் உண்மைகள் கோடிட்டுக் காட்டப்பட்ட வகையில் தங்களுடைய உரையை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

அ. தி. மு. க. கட்சியின் துணைத் தலைவர் அருமை நண்பர் எட்மண்ட் அவர்கள் ஒரு நல்ல வழக்கறிஞராக இருந்து— சட்ட நுணுக்கங்களை மாத்திரம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இந்தக் கண்டனத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியிருக்கிறார்.

ஆளுங்கட்சியின் தோழமைக் கட்சிகளாக இருக்கிற பார்வட் பிளாக், முஸ்லீம் லீக், தமிழ்நாடு கம்யூனிஸ்ட்

கட்சி, தமிழரசுக் கழகம் ஆகியவைகளின் சார்பில் பேசிய தலைவர்களும் உறுப்பினர்களும் இந்தக் கண்டனத் தீர்மானம் எந்த வகையில் தேவையற்றது என்பதற்கான நல்ல பல விளக்கங்களையெல்லாம் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.


கண்டனத் தீர்மானத்தின் வாசகமே அவசரக் காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பிறகு அதன் தொடர்பாக இந்திய நாட்டின் பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் அறிவிக்கப் பெற்ற இருபது அம்சத் திட்டத்தைத் தமிழகத்திலே தி.மு. கழக அரசு நடைமுறைப்படுத்தவில்லை என்கின்ற குற்றத்தை அடிப்படையாக வைத்துத்தான் கண்டனத் தீர்மானம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதலில் இருபது அம்சத் திட்டங்கள் எவையெவை என்பதை நாம் சிந்தித்து ஒரு முடிவிற்கு வருவதற்கு முன்பு அவைகளை இந்த ஆட்சி நிறைவேற்ற ஏற்கெனவே தொடங்கியுள்ளதா அல்லவா என்பதற்கான விவரங்களை ஆராய்வதற்கு முன்பு இதற்கு முன்னோடியாகச் சில கருத்துக்களை நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இந்தியத் துணைக் கண்டத்திலே ஆட்சி செய்த அரசின் சார்பிலே அறிவிக்கப்பட்டு —ஏறத்தாழ இருபத்தைந்தாயிரம் கோடி ரூபாயில் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக அறிவித்து — நான்காவது திட்டகாலம் முடிந்த பிறகு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான வரைவு ஏடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு —இந்தியத் தலைநகரில் எல்லா மாநில முதலமைச்சர்களும் கலந்து கொள்கிற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் நடைபெற்று— ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எவ்வளவு தொகை ஒதுக்குவது என்றும் அறிவிக்கப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மொத்தத் தொகையாக இருபத்தைந்தாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டது. அந்த நேரத்தில் தமிழகத்தை மாத்திரம் கணக்கிலே எடுத்துக் கொண்டால் — ஒவ்வொரு ஆண்டும் தரப் பட்ட மத்திய அரசின் உதவி என்ற வகையில் எடுத்துக் கொண்டு பார்த்தால், ஐந்தாண்டுக் காலத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம்முடைய மாநிலத்திற்குத் தரப் பட்டிருக்கிற தொகை இருநூறு கோடி ரூபாயாகும்.

இந்த இருநூறு கோடி ரூபாயில் 70 சதவிகிதத்தை நாம் கடனாகத் திருப்பித் தர வேண்டும். அதைத் திருப்பித் தருவது எப்படியென்றால் அடுத்த ஆண்டு நாற்பது கோடியோ, ஐம்பது கோடியோ தரும்போது, நாம் திருப்பித் தர வேண்டிய கடனைக் கழித்துக் கொண்டுதான் மீதத்தைத் தருவார்கள். அந்த வகையில் நாம் அந்தக் கடனைத் திருப்பித் தந்தாக வேண்டும்.



இப்படி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஐந்தாண்டுக் காலத்தில் 70 சத விகிதம் கடனாகவும், 30 சத விகிதம் மானியமாகவும் தந்த தொகை சற்றேறப்ப இருநூறு கோடி ரூபாயாகும்.


ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் எவ்வளவு கோடி ரூபாய்க்கு அறிவிக்கப்பட்ட தென்றால் — இது மிகப் பெரிய பிரம்மாண்டமான திட்டம் என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டு — ஐம்பத்து மூவாயிரம் கோடி ரூபாய் என்று அறிவிக்கப் பட்டபோது நாமெல்லாம் மகிழ்ச்சியடைந்தோம். ஏனென்றால் இரண்டு மடங்குக்கு மேலாக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யத் தொடங்குகிறது. ஆகவே மாநிலங்களின் தேவைகள் முழுமையாக நிறைவு செய்யப்பட இயலும் என்றெல்லாம் நினைத்தோம். இந்தத் திட்டம் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் இரண்டு நாட்கள் விவாதிக்கப்பட்டது. இப்படி விவாதித்து இரண்டு ஆண்டுக் காலமாகிறது.

ஐந்தாண்டுத் திட்டம் — ஒவ்வொரு ஆண்டுத் திட்டம் என்கிற வகையில்தான் நிதியை ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்குகிற அளவிற்குச் சுருங்கிப் போய் இருக்கிறது. இந்த ஐம்பத்து மூவாயிரம் கோடி ரூபாய் என்ற இலக்கை நாம் அடைய முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டுத் திட்டத்திற்கும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டதோ அந்த அளவு தொகைதான் இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் ஒவ்வொரு ஆண்டிற்கும் நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக 1974—75-ஆம் ஆண்டிற்கு நாற்பத்தாறு கோடி ரூபாயும் — 1975—76-ஆம் ஆண்டிற்கு நாற்பத்தாறு கோடி ரூபாயும் — மீதியிருக்கிற மூன்றாண்டுகளுக்கும் இதே நிலையில் அவர்கள்

நிதியை ஒதுக்கீடு செய்தால் ஐந்தாண்டிற்கும் மொத்தம் இருநூறு கோடி ரூபாய்தான் கிடைக்கும்.

ஆக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் 25 ஆயிரம் கோடியாக இருந்தது, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 53 ஆயிரம் கோடியாக இரட்டிப்பாக ஆக்கப்பட்டு — பிரம்மாண்டமான திட்டம் என்று பெரிய தலைப்பில் வெளியிடப்பட்ட அந்தத் திட்டத்திற்கு நாம் ஏறத்தாழ நானூறிலிருந்து ஐநூறு கோடி ரூபாய் வரை நிதி உதவியாகப் பெற வேண்டிய தொகைக்கு மாறுக இருநூறு கோடி ரூபாய்தான் பெறவிருக்கிறோம்.



1967-ஆம் ஆண்டு காங்கிரஸ் கமிட்டியில் மே மாதத்தில் பத்து அம்சத் திட்டம் என்ற ஒன்றை அறிவித்தார்கள். நண்பர் சுப்பு அவர்கள் நேற்றுப் பேசும்போது அரசியல் சட்டத்தில் முகப்புக் குறிக்கோளில் எவையெவை இருக்கின்றனவோ அவைகள்தான் இப்போது இருபது அம்சமாக உருவெடுத்திருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள்.

1967-ல் பத்து அம்சத் திட்டம் என்கிற ஒரு திட்டத்தைப் பிரகடனப்படுத்தினார்கள். அவைகள் என்னென்ன?

1. பாங்குகளைத் தேசிய மயமாக ஆக்குதல்; 2. இன்சூரன்ஸை தேசிய மயமாக ஆக்குதல்; 3. மன்னர் மானியம் ஒழித்தல்; 4. கிராமத் திட்டம் நிலச்சீர்திருத்தம்;

5. நகர்ப்புறச் சொத்துக்கு உச்ச வரம்பு; 6. மக்களின் அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்தல்; 7. ஏகபோக உரிமைக்குக் கட்டுப்பாடு செய்தல்; 8. கூட்டுறவுத் துறையை விரிவுபடுத்துதல்; 9. உணவு வாணிபத்தை அரசே மேற் கொள்ளுதல்; 10. ஏற்றுமதி இறக்குமதியில் பொருள் வாரியாக முன்னேற்றம் காணுதல்.

என்று இந்தப் பத்து அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்டது. இவைகளில் எவையெவை நிறைவேறின; எவையெவை நிறை வேறத் தொடங்கி இடையிலே முறிந்து போயின என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

பாங்குகள் தேசிய மயமாக்கப்படும் என்று அறிவித்தார் கள்; பதினைந்து பாங்குகள் தேசிய மயமாக்கப்பட்டன; அதற்கு மேல் அடி எடுத்து வைக்கவில்லை; இன்சூரன்ஸ் தேசிய மயமாக ஆக்கப்பட்டது; மன்னர் மானியம் ஒழிக்கப் பட்டது; கிராமத் திட்டம்—நிலச் சீர்திருத்தம் என்பது இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற இருபது அம்சத் திட்டத் தில் ஒன்று; நகர்ப்புறச் சொத்துக்கு உச்ச வரம்பு. இதுவும் இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டத்தில் ஒன்று; மக்களின் அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்தல் — இது என்னென்ன என்று குறிப்பிட்டுத் தெளிவாகச் சொல் லாமல் பொதுவாகச் சொல்லப்பட்ட ஒன்று.

ஏகபோக உரிமைக்குக் கட்டுப்பாடு செய்தல் என்பது, எக் காரணத்தாலோ இந்த இருபது அம்சத் திட்டத்தில் இடம் பெறவில்லை. கூட்டுறவுத் துறையை விரிவுபடுத்துதல் என் பது அப்போது அறிவிக்கப்பட்ட போதும் சரி, அதற்கு முன்பும் சரி, தமிழகத்தில் கூட்டுறவுத் துறை விரிவுபடுத்தப் பட்டு மேலும் மேலும் அது இன்றைக்கு விரிவுபடுத்தப்பட் டிருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் இப்போது அவர்கள் இந்த இருபது அம்சத் திட்டத்தில் கூட்டுறவுத் துறையை விட்டு விட்டு, அதற்குப் பதிலாக ஒரு புதிய அம் சத்தைச் சேர்த்திருக்கிறார்கள். பத்து அம்சத் திட்டத்தில் ஒன்பதாவது, உணவு வாணிபத்தை அரசு மேற்கொள்ளுதல் என்பதாகும். அதன்படி கோதுமை வியாபாரத்தை அரசு மேற்கொண்டது. கொஞ்ச நாட்களுக்கெல்லாம் அது சரிப் பட்டு வரவில்லை என்று கைவிட்டு விட்டது. பிறகு ஏற்றுமதி —இறக்குமதியில் பொருள்வாரி முன்னேற்றம் என்பதாகும்; அதுவும் முழுமையாகச் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்தப் பத்து அம்சத் திட்டத்திற்குப் பிறகு இன்று இருபது அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருபது அம்சத் திட்டத்தை நாங்கள் ஏற்று நடத்தவில்லை; அல்லது எதிர்க்கிறோம் என்றெல்லாம் தவறான குற்றச்சாட்டுச் சொல் கிற நேரத்தில் பத்து அம்சத் திட்டத்திலே கிடுகும் தன்னு

டைய ஆதரவை அளித்திருக்கிறது என்பதற்கு ஏராளமான சான்றுகளை நாம் காணமுடியும்.

இருபது அம்சத் திட்டங்கள் எவையெவை? ஐந்தாறு திட்டங்களைமட்டுமே இங்கேபேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் கோடிட்டுக் காட்டினர்கள்.

1-வது அம்சம்

முதல் திட்டமாக, ''இன்றியமையாப் பண்டங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கவும், கொள்முதலை விரைவுபடுத்தவும், வழங்கு பணியைச் சீரமைக்கவும், அரசு பல தொடர் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்'' என்று பிரதமர் வானொலியில் அறிவித்தார்கள். தமிழக அரசு இதிலே கவனம் செலுத்தியதா? இல்லையா?

இந்த ஆண்டு ஜூன் திங்கள் தொடங்கி நிலவி வருகின்ற வாய்ப்பான பருவ மழையின் நிலைமைகளை ஒட்டி வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கத் தீவிர நடவடிக்கைகளை அரசு மேற் கொண்டிருக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமேயானால்—பிரதமர் குறிப்பிட்டிருக்கிறார்களே — அந்த உற்பத்தி முனையிலே கூட — பொதுவாக ஆண்டு ஒன்றுக்கு விதை நெல் எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டு வந்தது என்றால் — 9,500 டன்தான் இதுவரை கொள்முதல் செய்யப்பட்டு வந்தது;—நடப்பு வேளாண்மைப் பருவத்தில் 18,000 டன் விதை நெல் கொள்முதல் செய்யப்படுகிறது என்பதை — அந்தத் திட்டத்திற்கு அனுசரணையான காரியங்கள்தான் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறதேயல்லாமல் எதிர்ப்பான காரியங்கள் இங்கே நடைபெறவில்லை என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

புதிய நெல் வகைகளாக ஏ.டி.டி. 31, பூசா 33 ஆகியவைகள் அறிமுகப்படுத்தப்பட்டு — ஏ. டி. டி. பயிரிடப்படும் பரப்பு ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ஏக்கர் என்கிற அளவிலும், பூசா 33 பயிரிடப்படும் பரப்பு ஐம்பத்தாறாயிரம் ஏக்கர் என்கிற அளவிலும் பயிரிடப்படுகிறது.

உரம் வேளாண்மை உற்பத்திக்கு மிகவும்முக்கியமானது. பொதுவாக ஒரு ஆண்டுக்கு வழங்கப்படும் உரத்தின் அளவு 20,520 டன்தான் இதுவரை நம்முடைய கஷ்டங்களின் காரணமாக இருந்தது. இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையில் மாத்திரம் வழங்கப்பட்டிருக்கிற ரசாயன உரத்தின் அளவு 25,123 டன்; இன்னும் மேலும் சம்பாப் பயிர்களுக்கெல்லாம் நாம் வழங்கவிருக்கிறோம். ஆகவே அந்த உரத் தட்டுப்பாடும் இல்லை. உற்பத்தி முனையில் நாம் தீவிரமாகவே இருக்கிறோம்.




அதைப் போலவே பூச்சிகளால் ஏற்படுகின்ற தொல் லையைக் கட்டுப்படுத்தவும் அதை அறவே நீக்குவதற்கும், தெளிப்பான்களின் எண்ணிக்கையை உயர்த்தி அந்த முனை யிலும் அலுவலாளர்கள் அயராது பணியாற்றி வருகிறார்கள்.

பயிர்களைப் பாதுகாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வரு கிறோம். வறட்சி நேரத்தில் விவசாயிகளுக்கு உதவி செய்யும் வகையில் டீசல் எஞ்சின்கள் வைத்துக் கொள்வார்களேயா னால் அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என்று அறிவித்து, அப்படி வழங்கியதன் மூலமாக இது வரை யில் 12,200 பேர் பயன் பெற்றிருக்கிறார்கள். ஏற்கெனவே அறிவித்தபடி பதினைந்தாயிரம் பேர்களுக்கு இந்தப் பயன் செல்லத் தக்க வகையில் நாம் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கியிருக்கிறோம். வறட்சி யால் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு இந்த மானிய உதவி எவ்வளவு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதை விவசாயப் பெருங்குடி மக்கள் அறிவார்கள்.

உற்பத்தி முனையில் பெருக்கப்பட வேண்டுமென்று, பிரதமர் அவர்கள் அறிவித்ததால் இவைகளை எல்லாம் நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சோள விதைகள் மாத்திரம் இந்த ஆண்டில், கோடைப் பருவத்தில் கோவை, திருநெல்வேலி, மதுரை, சேலத்தில் ஒரு பகுதி ஆகிய மாவட்டங்களில் 500 டன் வீரிய ஒட்டுச் சோள விதைகளும், மக்காச் சோள விதைகளும் வழங்கப்பட் டிருக்கின்றன.



1974—75-ல் அரிசி உற்பத்தி 41.66 இலட்சம் டன்னாக இருந்தது. இந்த ஆண்டும் இயற்கை சென்ற ஆண்டைப் போல் கொடுமையாய் விடாது என்ற நம்பிக்கையின்பேரில் 1975—76-ல் எதிர்பார்க்கப்படும் அரிசி உற்பத்தி அறுபத்தாறு இலட்சம் டன் ஆக இருக்கும். சோளம், கம்பு, மக்காச் சோளம் ஆகியவற்றிலும், ஏழு இலட்சத்து எழுபத்தி நான்காயிரம் டன் உற்பத்தி 1974—75-ல் இருந்ததற்கு மாறாக, 1975—76-ல் எதிர்பார்க்கப்படும் உற்பத்தியின் அளவு பதினேழு இலட்சம் டன்னாகும். பருத்தி 74—75-ல் உற்பத்தி இரண்டு இலட்சத்து இருபதாயிரம் பேல்கள்; அது வருகின்ற 75—76-ல் நான்கு இலட்சம் டன்கள் என்ற அளவிற்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

கரும்பைப் பற்றி தங்கமணி அவர்கள் கூடச் சொன்னார்கள். நேற்று மத்திய சர்க்காரிடமிருந்து எழுதப்பட்டுள்ள கடிதத்தில் வெல்லச் சர்க்கரைக்கான விலையை உயர்த்தஇயலாது என்று சொல்லிவிட்டார்கள். அப்படிச் சொல்லியிருப்பது அகில இந்திய அளவிலா என்றால் இல்லை. வடபுலத்தில் இருக்கிற மாநிலங்களுக்கு உயர்த்தித் தரப்படும்; ஆனால் நம்முடைய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். இதன் காரணமாகக் கரும்பு சாகுபடி செய்கிற விவசாயிகள் பாதிக்கப்

படுவார்கள் என்பதும், அதன் காரணமாகக் கரும்பு சாகுபடி குறையும்என்பதையும்தவிர்க்கப்பட முடியாத சில கஷ்டங் களுக்கு நாம் ஆளாக நேரிடும் என்பதையும் நான் இந்த நேரத்தில் எடுத்துக் காட்டாமல் இருக்க முடியாது.

தங்கமணி : சர்க்கரை விலை சம்பந்தமாக லெவி சர்க் கரை என்றும் லெவிக்கு அப்பாற்பட்ட சர்க்கரை என்றும் இருப்பது சரியல்ல என்பது எங்களுடைய நிலை. லெவி சர்க்கரைக்கு விலை நிச்சயிக்கும் நேரத்தில் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களுக்கு அதிகமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக ஒரே விலையிருக்க வேண்டும் என்ற நிலையை அரசு இங்கே எடுக்குமானால் அதை ஆதரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்..

முதலமைச்சர் : நான் இதை மகிழ்ச்சியோடு வரவேற் கிறேன். அதனால்தான் நான் முதலில் சொல்லும்போது தங்கமணி அவர்கள் நிதானமாக, நியாயங்களை உணர்ந்து பேசினார்கள் என்று சொன்னேன்.

தலைவர் அவர்களே கடுமையான வறட்சி நேரத்தில் கூட, தமிழகத்தில் உள்ள மொத்தம் 98 இலட்சம் குடும்பங் களில் 52 இலட்சம் குடும்பங்களுக்கு நாம் போதிய அளவு தர முடியாவிட்டாலும் ஓரளவு அரிசியை வழங்க முயற்சிகளை மேற்கொண்டோம். அதற்கு நாம் எடுத்த நடவடிக்கையாகத் தமிழ் நாடு உணவுப் பொருள் வழங்கும் கார்ப்பொரேஷன் சார்பிலும், கூட்டுறவுச் சங்கங்கள் சார்பிலும் உள்ளாட்சி மன்றங்கள் சார்பிலும் நடத்தும் சில்லறை விற்பனைக் கடை கள் மூலம் 9,926 நிலையங்களின் மூலம் 52 இலட்சம் குடும்பங் களுக்கு நாம் அரிசி வழங்கும் ஏற்பாட்டைச் செய்து முடித் தோம்.

நகர்ப் பகுதியில் ஐநூறு ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு பத்து கிலோ அரிசி சென்னை, கோவை ஆகிய இடங்களில் வழங்கப்பட்டு வந்தது. அதை இப்போது இருபது கிலோவாக உயர்த்தியிருக்கிறோம். அதோடு மாத்திரமல்லாமல் திருச்சி, சேலம் ஆகிய நகரங் களுக்கும் இந்தத் திட்டத்தை முதல் கட்டமாக நாம் நிறை வேற்றியிருக்கிறோம்.

பிரதமர் அறிவித்த முதல் அம்சத்திற்கு நான் அளித்த விளக்கம் இது!

2-வது அம்சம்

"நமது மக்களில் மிகப் பெரும் பாலோர் கிராமப் புறங்களில் வாழ்கின்றனர். நில உச்ச வரம்புச் சட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தி, சிலரிடம் உபரியாக இருக்கும் நிலங்களை எடுத்து நிலமற்றவர்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும். நில உடைமை ஆவணங்களைத் தயாரித்து முடிப்பதில் உள்ளூர் மக்களின் உதவி நமக்குத் தேவையாகும்."

இது பிரதமர் அறிவித்த இரண்டாவது அம்சம்! இதன் பின், உபரி நிலத்தை நாம் எடுத்து வழங்கியிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். "நூறு புதிய சாதனைகள்" என்று ஒரு புத்தகம் போட்டிருக்கிறார்கள். அதில் இந்த விவரம் தவறாக இருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் கூட — பத்து இலட்சம் ஏக்கர் நிலத்தை விநியோகித்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பத்து லட்சம் ஏக்கர் விநியோகிக்கவில்லை. அது முடியுமா? என்றால் கூட இயலாது. அதுவும் எப்போது தெரியுமா? அவசர நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு தமிழ் நாட்டில் பத்து லட்சம் ஏக்கர் நிலத்தை விநியோகித்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது என்ன மாயா பஜாரா? "அவசர நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு எல்லா மாநிலங்களும் நிலத்தை விநியோகித்திட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ளன; கேரளாவில் ஒரு லட்சத்து முப்பதாயிரம் ஹெக்டர் கொடுக்கப்பட்டது; இதுவும் சரியாக இருக்க முடியுமா என்று கேட்டால் முடியாது. கேரள அரசைக் கேட்டால் இல்லை என்றுதான் சொல்வார்கள்."

பி. சீனிவாசன் : 'சைபர்' தவறுதலாக அச்சிடப்பட்டிருக்கும்.


முதலமைச்சர் : ஒன்று என்று போட்டு பக்கத்திலே சைபர்களைப் போட்டிருந்தால், ஒரு சைபர் அதிகமாக ஆகியிருக்கலாம் என்று நினைக்கலாம். ஆனால் இதிலே பத்து என்று எண்ணால் எழுதி, அதற்குப் பக்கத்திலே லட்சம் என்று எழுத்தால் எழுதியிருக்கிறது.

அனந்தநாயகி : இந்தத் தகவலைத் தவறுதலாக தமிழக அரசுதான் கொடுத்திருக்கிறார்கள்.

முதலமைச்சர் : அப்படித் தவறுதலாக நாங்கள் கொடுத்திருந்தால், பத்து இலட்சம் ஏக்கர் என்று நாங்களே கூட ஒப்புக் கொண்டிருக்கலாம். ஆகவே "நூறு புதிய சாதனைகள்" என்ற புத்தகம் சில தவறான தகவல்களைத் தருகின்ற

காரணத்தால் இதை நான் மேற்கோளாக எடுத்துக் காட்ட விரும்பவில்லை.

1967-க்கு முன்பு 6—4—60-இல் உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டம் வந்த பிறகு ஏழு ஆண்டுக் காலத்தில் உபரி நிலமாக அறிவிக்கப்பட்டது 24,194 ஏக்கர். இதிலே அரசு கைப்பற்றியது 16,330 ஏக்கர். மற்றவர்களுக்கு ஒப்படை செய்தது மிகவுமே இல்லை. உபரி நிலம் யாருக்கும் வழங்கப்படாத காரணத்தால் பயன் அடைந்தவர்கள் யாரும் இல்லை.



1967க்குப் பிறகு உபரி நிலமாக அறிவிக்கப்பட்டது 1,08,068 ஏக்கர். அதிலே அரசு கைப்பற்றியது 88,146 ஏக்கர். நிலமற்றவர்களுக்கு ஒப்படை செய்தது 62,682 ஏக்கர்; பயனடைந்த உழவர் பெருமக்கள் 38,504 பேர்.

இதுதான் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற உச்ச வரம்புச் சட்டத்திற்குப் பிறகு நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் காரணமாக ஏற்பட்ட பயன்! அந்தச் சட்டத்தை 15-2-70-ல் கொடுத்தோம். அந்தச் சட்டத்திற்குப் பிறகு நாம் எடுத்த வேகமான நடவடிக்கைகளின் காரணமாக 62,682 ஏக்கர் நிலமற்றவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது.


அகில இந்திய ஆளும் காங்கிரஸ் கமிட்டி கூட ஒரு நல்ல மதிப்புரையை இந்தியாவிலேயே நில உச்ச வரம்பில் — நிலச் சீர்திருத்தத்தில் தமிழ்நாடுதான் இன்றைக்கு முன்னணியில் நிற்கிறது என்று நற்சான்றை அளித்திருக்கிறது.

கே. டி. கே. பேசும்போது, இதிலே பழத்தோட்டங் களுக்கு இருக்கிற விதி விலக்கை நீங்கள் இன்னும் எடுக்க வில்லையே என்று கேட்டார். எல்லாப் பழத் தோட்டங் களின் விஸ்தீரணத்தை எடுத்துக் கொண்டால் 18,169 ஏக்கர் தான். பழத் தோட்டங்களை உச்சவரம்பின் கீழ்க்கொண்டு வந்தால், அதனுடைய உற்பத்தி கெடுவதும் — வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாவதும் கூடக்கெடக்கூடும் என்பதற்காகத்தான் விஸ்தீரணம் குறை வாக இருப்பதால் விட்டு விட்டோம்.

அதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், மைசூ ரில் கூட ஆயிரம் ஏக்கரா 'லினேலே' என்ற செடி வளர்க்கப் படுகிற இடம் தேவிகா ராணி என்ற பழைய சினிமா நட்சத் திரம் ஒருவருக்குச் சொந்தமான இடம்—அங்கு வாசனைப் பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதற்காக விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆயிரம் ஏக்கராவில் அந்த வாசனைப் பொருள் உற்பத்தியானால் அவைகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்பதற்காக விதி விலக்கு எப்படிக் கர்னாடகத்தில் அளிக்கப்பட்டிருக்கிறதோ அதைப் போலத்தான் பழத்தோட்டங்களுக்கு இங்கே விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல் வேறல்ல.

நாம் எத்தனை விதிவிலக்குகளை ரத்து செய்திருக்கிறோம்? கரும்பாலை நிலத்திற்கு விதி விலக்கு இருந்தது; அதை ரத்து செய்து விட்டோம்; அதைப் போலவே மேய்ச்சல் நிலத்திற்கு, பால் பண்ணை நிலத்திற்கு — விதிவிலக்கு இருந்தது. அதை ரத்து செய்துவிட்டோம்.

பொது அறக்கட்டளைகளுக்கு ஒரு வரம்பு வைத்து விட் டோம். இந்த வரம்பு கேரளாவில், ஆந்திராவில் கிடையாது. பொது அறக் கட்டளைகள் அங்கே எவ்வளவு வேண்டுமானா லும் வைத்துக் கொள்ளலாம். ஆனால் அதிலே வருகின்ற வருமானம் அறக்கட்டளைக்கே செலவழிக்கப்பட வேண்டும். இது அங்கே; இங்கே நாம் பொது அறக்கட்டளைகள் இவ்வளவு தான் வைத்துக் கொள்ள வேண்டும்; அதிலே வருகின்ற



வருமானம் அதற்கே செலவாக வேண்டும் என்று சட்டம் செய்திருக்கிறோம். அதுவும் 1—3—72-ல் என்னென்ன அறக்கட்டளைகள் இருந்ததோ அவைகளுக்குத்தான் அது பொருந்தும். அதற்குப் பிறகு புதிய அறக் கட்டளைகள் தோன்றி இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்று சட்டம் போட்டிருக்கிறோம். இந்தப் பொது அறக்கட்டளைகளில் கல்லூரி என்றால் நாற்பது ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது; உயர்நிலைப் பள்ளிக்கு 20 ஸ்டாண்டர்டு ஏக்கரா; ஆரம்பப் பள்ளி என்றால் 10 ஸ்டாண்டர்டு ஏக்கரா; மாணவர் விடுதி என்றால் 25 ஸ்டாண்டர்டு ஏக்கரா; தொழிற் கல்வி என்றால் 25 ஸ்டாண்டர்டு ஏக்கரா; விவசாயப் பள்ளிகளுக்கு 25 ஸ்டாண்டர்டு ஏக்கரா; அனுதை இல்லங்களுக்கு 25 ஸ்டாண்டர்டு ஏக்கரா; மற்ற அறக்கட்டளைகளுக்கு ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கரா என்றும் அதற்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்றும் நாம் நிர்ணயித்திருக்கிறோம்.

அடுத்து குத்தகை சாகுபடிதாரர் — இதற்கெல்லாம் ஆவணங்கள் வேண்டும்; பதிவு முறை வேண்டும் என்று பிரத

மர் அறிவித்திருக்கிறார். நாங்கள் அதையும் செய்திருக்கி றோம். அவர்கள் அறிவித்த பிறகு அல்ல; 1969-லேயே தமிழ்நாடு வேளாண்மை நிலக் குத்தகை உரிமைகள் பதிவேட்டுச் சட்டத்தை நாம் நிறைவேற்றியிருக்கிறோம்.

இதுவரையில் பதிவு செய்யப்பட்ட குத்தகைதாரர்களின் எண்ணிக்கை 3,99,350 என்று கணக்கெடுத்திருக்கிறோம். அவர்களின் அனுபோகத்தில் உள்ள நிலம் 6,03,899 ஏக்கர் என்றும் கணக்கை இதுவரை முடித்திருக்கிறோம்.

அஃதன்னியில் நில உடமையாளர்கள் வைத்திருக்கிற நிலத்திற்கான கணக்கு விவரங்கள் தெரிந்து கொள்வதற்காக நிலச் சீர்திருத்தங்களுக்கு மேலும் பயன்படும் என்ற வகை யில் பட்டா விவரக் குறிப்பேடு என்று ஒன்றை ஒவ்வொரு விவசாயியும் வைத்துக் கொள்ள வேண்டுமென்று 1972-ல் ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டு இதுவரை கொடுக்கப்பட்ட அப்படிப்பட்ட பட்டா விவரக் குறிப்பேடுகளின் எண்ணிக்கை 1 கோடியே நான்கு இலட்சமாகும். இதற்கான செலவு 1 கோடி ரூபாயாகும்.

தரிசு நிலங்களை ஒப்படை செய்ய வேண்டும் என்பது பிரதமர் அவர்களுடைய இருபது அம்சத் திட்டங்களிலே ஒன்று. நாடு சுதந்திரம் பெற்ற 1947-லிருந்து 1967 வரை தமிழகத்தில் ஒப்படை செய்யப்பட்ட நிலம் 2,88,000 ஏக்கரா. பயனடைந்தவர்கள் 1,15,000 பேர்.

1967-க்குப் பிறகு இந்த எட்டாண்டுக் காலத்தில் நாம் ஒப்படை செய்த நிலம் 7,19,000 ஏக்கரா. பயனடைந்தவர் கள் 3,69,000 பேர்.

இந்த உச்சவரம்பில் பிறமி எல்லாம் நடந்து விடுவதாக மாரிமுத்து சொன்னார். ஒன்றிரண்டு நடந்தது. இன்னும் சில அந்தக் காலத்திலேயே நடந்துவிட்டது. ஒரு முக்கியமான அமைச்சரின் சொந்தக்காரரே கூட—நான் பெயரை யெல் லாம் சொல்ல விரும்பவில்லை— அதாவது 6—4—60-இல் 282 சாதாரண ஏக்கரா, அதாவது 141 ஸ்டாண்டர்டு ஏக்கரா இருந்தது. ஆனால் 2—10—62-க்குள்ளாக இந்த 141 ஸ்டாண் டர்டு ஏக்கரில் 135 ஸ்டாண்டர்டு ஏக்கராவை, அந்த 'அமைச்சருக்குச் சொந்தக்காரர்' விற்றுவிட்டார். உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டார். இந்த இரண்டு ஆண்டுக்காலத்திற்குள் 6—4—60-லிருந்து 2—10— 62-க்குள் யாரும் இந்தச் சட்டத்தை ஏமாற்றி அவர்களுக் குரிய நிலத்தை விற்கக் கூடாது என்று இருந்தும் கூட ''பணம் வருகிறதே அப்பா'' என்ற காரணத்திலும் — ''உச்ச வரம்பு வந்துவிடுமே அப்பா'' என்ற அச்சத்திலும் அவர் 135 ஸ்டாண்டர்டு ஏக்கராவை விற்றுவிட்டார். அதற்கு அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். 1967-க்

குள் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். 1967 வரையில் அவர்மீது நடவடிக்கை எடுக்கவில்லை. 1967-க்குப் பிறகு அண்ணு அவர்கள் தலைமையில் கழக ஆட்சி வந்த பிறகுதான் அந்தத் தவறுக்கு நடவடிக்கை இந்த அரசின் சார்பில் எடுக் கப்பட்டிருக்கிறது.

3-வது அம்சம்


முதலமைச்சர் : அடுத்து மூன்றுவது அம்சம். 'கிராமப் பகுதிகளில் வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் வெகுவாக விரிவாக்கப்படும். நிலமற்றவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கச் சட்டங்கள் கொண்டு வரப்படும்'' இது பிரதமர் அவர்களுடைய அறிவிப்பு.

அண்மையில் மத்திய அரசு தயாரித்திருக்கிற ஒரு ஆய் வின்படி குடியானவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம், பீகார், குஜராத், ஜம்மு காஷ்மீர், ஓரிசா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் மாத்திரமே நடைபெற்று வருகிறது. அதிலும் தமிழ் நாட்டில் மாத்திரமே குடியான வர்களுக்கும், உழவுத் தொழிலாளர்களுக்கும் வீட்டு மனைகள் இலவசமாக வழங்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில் இந்த மனைகளைப் பெறுவதற்கு அதன் விலையை உழவர்கள் செலுத்தி யாகவேண்டும்.

1971-ஆம் ஆண்டு தமிழ் நாடு குடியிருப்பு அனுபோக தாரர்கள் சட்டத்தைச் செய்தோம். 1975-ல் அல்ல ; இருபது அம்சத் திட்டம் வானொலியில் அறிவிக்கப்பட்ட பிறகு அல்ல; 1971-லேயே செய்தோம்.

இந்தச் சட்டத்தின் கீழ் குடியிருப்பு மனைகள் பெற்ற வர்கள் 1,75,000 பேர்கள். இவர்களில் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்கள், 1,02,404 பேர்கள். பிற்படுத்தப்பட்ட வர்கள் 40,550 பேர்கள்; இதர வகுப்பினர் 32,123 பேர்கள். இதற்காக அரசுக்கு ஆன செலவு கிட்டத்தட்ட 21 இலட்சம் ரூபாயாகும்.

அரசுக்குச் சொந்தமான நிலத்திலிருந்து வீட்டுமனை ஒப்படை செய்யும் திட்டத்தின்கீழ் 1967-க்கு முன்பு இருப தாண்டுக் காலத்தில் அப்போதிருந்த ஆட்சியில் வீட்டு மனை ஒப்படை செய்தது — பட்டாக் கொடுத்தது 63,770 பேர் களுக்காகும். இந்த எட்டாண்டுக் காலத்தில் பட்டாக் கொடுத் திருப்பது 5,03,697 பேர்களுக்காகும். அரிசன மக்களுக்கு மாத்திரம் நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுத்த வகை



யில் இது வரையில் 2,36,000 அரிசனக் குடும்பங்கள் பயன் பெற்றிருக்கின்றன. இதற்கான செலவு நான்கு கோடியே இருபத்தைந்து இலட்சமாகும்.

இதைத் தவிர பிரதமர் குறிப்பிடாத அம்சமாக — 30,000 அரிசனங்களுக்கு டிசம்பர் இறுதிக்குள் நல்ல கெட்டியான வீடுகள் — ஒரு வீடு நான்காயிரம் பெறுமானமுள்ள அளவிற்கு வீடுகள் கட்டித் தரத் திட்டமிட்டு, அது முடிவு அடையவிருக்கிறது. இதற்கான செலவு பதிமூன்றரை கோடி ரூபாயாகும்.

அதைப்போலவே மீனவர்களுக்கு ஐந்தாயிரம் வீடுகள் முதற் கட்டமாகக் கட்டித்தர இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டு, அந்த வேலைகளும் வேகமாக நடைபெற்று வருகிறது. இது பிரதமருடைய இருபது அம்சத் திட்டங்களிலே இல்லாத ஒன்றாகும்.

குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் — இது 1975 -க்குப் பிறகல்ல; அவசரச் சட்டத்திற்குப் பிறகல்ல; அவர்கள் அறிவித்ததற்குப் பிறகல்ல—1970—71-லேயே தொடங்கப் பட்டு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் 3,220 குடியிருப்புகள்; குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் 17,019 குடி




யிருப்புகள் — இவைகள் முடிவுற்று — கட்டிக் கொண்டிருக்கிற குடியிருப்புகளின் எண்ணிக்கை 3,312 ; ஆக பதினேழு கோடி ரூபாய் செலவில் ஏறத்தாழ இருபதாயிரம் வீடுகள் குடிசைவாசிகளுக்காகக் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. இதுவும் இந்திரா காந்தி அவர்களுடைய இருபது அம்சத் திட்டங்களில் இல்லாத ஒன்றுகும்.

இதை நிறைவேற்றியதற்காக வேண்டுமானால் — இவைகளைத் தொடங்கியதற்காக வேண்டுமானால் — இல்லாததை எல்லாம் நீ எப்படி நிறைவேற்றலாம் என்று நீங்கள் கோபித்துக் கொள்ளலாமே தவிர வேறு எதுவுமில்லை.

4-வது அம்சம்

"கிராம மக்களின் கடன் சுமையைப் படிப்படியாகக் குறைக்க, அவர்களிடமிருந்து கடனைத் திருப்பப் பெறுவதற்காக நீதிமன்றத்தை நாடாமல் இருக்க, வழக்குகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்செல்லுபடியாகாமல் இருக்கச் செய்யவும், கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள், அரசுக் கடன்கள் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்"—இது பிரதமருடைய அறிவிப்பாகும்.


கடன்சுமை
சிட்டமின்றம்
1972-ஆம் ஆண்டு கடன்
ரூபாய்

கிராமப் புற மக்களின் கடன் சுமையைப் போக்குவது மாத்திரமல்லாமல், நகர்ப்புற மக்களுடைய கடன் சுமையைப் போக்குவதற்கும் 1972-ஆம் ஆண்டு ஒரு கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வந்தோம். 1975-ஆம் ஆண்டு கடன் பட்டோர் (தற்காலிக) நிவாரண அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தோம். அண்மையில் ஏற்பட்ட வறட்சியை ஒட்டி, இந்த அவசரச் சட்டம் 1975 ஜனவரியில் அறிவிக்கப் பட்டது. இந்தச் சட்டத்தின் கீழ், வழக்குத் தொடர்ந்தோ ஏனைய சட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டோ கடனை வசூ லிப்பது ஓராண்டுக் காலத்திற்குக் கூடாது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கூட்டுறவுச் சங்கம், அரசு ஆகியவைகளின் கடனைக் கூட இதிலே அவைகள் வராது என்றாலும் கூட—அதனுடைய வசூலை ஓராண்டுக்காலத்திற்குத் தள்ளி வைக்க இந்த அரசின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டு—அந்த வசதியும் கிராமப் புற மக்களுக்குச் செய்து கொடுக்கப்பட்டதை உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது.

1975-ஆம் ஆண்டு ஜூலையில் அறிவிக்கப்பட்ட திட்டத் தின்படி உழவர்கள் அல்லாத ஏனைய கடன்பட்டவர்கட்கும் கடன் சுமையிலிருந்து நிவாரணம் பெறலாம் என்ற நிலையில் 1976 ஜனவரி பதினைந்தாம் தேதி வரையில் வட்டி எதுவும் வசூலிக்கக் கூடாது என்று இந்தச் சட்டம் ''துயர்தணிப்பு'' அளிக்கிறது. சிலர் இதனை அறவே ரத்து செய்ய வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.


நண்பர் வி. கிருஷ்ணமூர்த்தி இந்த மசோதா வந்த நேரத்தில் குறிப்பிட்டதை நாம் அவ்வளவு சாதாரணமாகப் புறக்கணித்து விட முடியாது. கடனை அறவே ரத்து செய்வது என்ற அவ்வளவு முற்போக்கான நிலைமைக்கு நாம் செல்வோ மேயானால்பிறகு கடன் கொடுப்பவர்களேஇருக்க மாட்டார்கள். கடன் கொடுப்பவர்கள் இல்லாத நேரத்தில் கடன் கொடுக்கின்ற வசதிகளை கிராமப் புற மக்களுக்கு உற்பத்தி யின் அடிப்படையில் இல்லாமல் அவர்களுடைய விவசாயப் பொருள்களைக் காட்டி — விவசாய நிலங்களைக் காட்டிப் பெறு கின்ற கடனை அல்லாமல், அவர்களுடைய திடீர்த்தேவை களுக்குக் கடன் தருகின்ற வங்கிகள் கூட்டுறவு இயக்கங்கள்— இந்த வசதிகள் பெருகிய பிறகுதான் அதைப்பற்றி நாம் யோசிக்க முடியுமேயல்லாமல் எல்லாக் கடனையும் ரத்து செய்ய வேண்டும் என்று பிரதமர் இந்திரா காந்தி அவர்களே கூடச் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுடைய சுமை ஒழிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கேற்ப நிவாரணம் அளிக்கப்பட வேண்டுமென்று சொல் லியிருக்கிறார்கள். அதையும் நாம் படிப்படியாகத்தொடர்ந்து

இரண்டு மூன்று ஆண்டுக் காலமாகச் செய்து வருகிறோம். ஆகவே இதை முன்பே செய்தோம் என்ற குற்றத்தைத் தவிர அறவே செய்யவில்லை ; செய்ய மறுக்கிறோம் என்ற குற்றத்தை யாரும் நம்மீது சாட்டிட இயலாது.

5-வது அம்சம்

"உழவுத் தொழிலாளர்களுக்குத் தற்போதுள்ள குறைந்த ஊதிய விகிதச் சட்டத்தை மறு ஆய்வு செய்தல் ; குறைந்த அளவு ஊதியம் தரப்படும் இடங்களில் எல்லாம் இந்த ஊதியத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுத்தல்" இது பிரதமர் அறிவித்த திட்டம். 1969-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் திரு. கார்த்திகேயன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் இந்தக் கூலி நிர்ணயம் —குறைந்த பட்சக் கூலி எவ்வளவு இருக்க வேண்டுமென்று சொல்லி, அதை நடைமுறைப் படுத்தினோம். தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் —தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள்— அரசின் சார்பிலே — ஆக இப்படி முத்தரப்பு மாநாட்டைக் கூட்டி ஒரு சுமுக மான முடிவினை எடுத்திருக்கிறோம்.

இப்போது மீண்டும் ஒரு குழுவை நாம் இன்றைக்கு அமைத்து அந்தக் குழு நண்பர் சீனிவாசன் அவர்கள் தலைமை யில் தன்னுடைய ஆய்வை நடத்தி வருகிறது. அது பல்வேறு மாவட்டங்களில் இந்த ஆய்வை நடத்தும்.



இதற்கிடையே ஆண்—பெண் ஆகிய இரு சாராருடைய சம்பளமும் சமமாக இருக்க வேண்டும் என்கிற ஒரு அறிவிப்பையும் அரசின் சார்பில் செய்திருக்கிறார்கள். அதையும் அடிப்படையாக வைத்து, வேலை செய்கிறவர்கள் ஆணு பெண்ணு—என்று கூட இல்லாமல் இந்த வேலைக்கு இந்தக் கூலி அதை ஆண் செய்தாலும் சரி — பெண் செய்தாலும் சரி — என்று நிர்ணயிக்கிற அளவிற்கு அந்தக் குழு தன்னுடைய ஆய்வை நடத்தி விரைவில் ஒரு முடிவினைத் தரும். அதை அரசின் சார்பில் பரிசீலிக்கப்படும் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

6-வது அம்சம்

"உழவுத் தொழிலையும், தொழில் உற்பத்தியையும் பெருக்க நீருட், மின்சாரமும் இன்றியமையாதன''. ''குறைந்தது 50 இலட்சம் எக்டேர் நிலத்தையேனும் விரைவில் சாகுபடிக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்''. இது பிரதமருடைய ஆறுவது அறிவிப்பு. ஐம்பது இலட்சம் எக்டேர் என்றால் ஒண்ணேகால் கோடி ஏக்கர். இந்தியாவில் ஒண்ணேகால் கோடி ஏக்கர் புதிய பாசன வசதிகளைப் பெற இந்திரா காந்தி அவர்கள் நடவடிக்கை எடுக்க முனைந்திருப்பது பாராட்டக்கூடிய அம்சம். ஏனென்றால் இந்தியா வேளாண்மைத் தொழிலைப் பெரிதும் நம்பியிருக்கிற ஒரு பெரும் பூபாகம். இப்படிப்பட்ட இடத்தில்மற்றதொழிலுக்கு மேலாக வேளாண்மைத் தொழிலுக்கு முதலிடம் தரவேண்டும். அதை இருபத்தெட்டாண்டுக் காலச் சுதந்திரத்திற்குப் பிறகாவது உணர்ந்து பாசன வசதிகளைப் பெருக்க வேண்டும் என்ற ஒரு நல்ல முடிவை இருபது அம்சத்தின் மூலமாக அறிவித்த இந்திரா காந்தி அம்மையார் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு விவரத்தை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். 1947-ஆம் ஆண்டு வரை—பாண்டியர்கள், சேரர்கள், சோழர்கள், பல்லவர்கள் என்று இப்படியெல்லாம் பல மன்னர்கள் ஆண்டு, வெள்ளையர்கள் ஆண்டு முடித்த 1947 வரை—தமிழ் நாட்டில் பாசன வசதி பெற்ற நிலம் சுமார் நாற்பத்தி நான்கு இலட்சம் ஏக்கரா. அந்தப் பழம் பெரும் மன்னர்களுக்குப் பிறகு, பறங்கியர்களுக்குப் பிறகு பெரியவர் பக்தவத்சலம் ஆண்டு முடித்த 1967 வரையில் இருபதாண்டுக் காலத்தில் மேலும் எட்டு இலட்சம் ஏக்கரா பாசன வசதி பெற்றது. பக்தவத்சலம் காலத்திற்குப் பிறகு இந்த எட்டாண்டுக் கால எங்கள் ஆட்சியில் மேலும் பதினைந்து இலட்சம் ஏக்கரா பாசன வசதி பெற்றிருக்கிறது.

அது மாத்திரமல்ல; 1967-க்குப் பின்பு புதிய நீர்ப் பாசனத் திட்டத்திற்காக இந்த அரசின் சார்பில் செலவழிக்கப்பட்ட தொகை 148 கோடி ரூபாய். செயல் வடிவம் பெற்று வருகின்ற திட்டங்களின் மதிப்பு 49 கோடி ரூபாய்.

இன்னும் மத்திய அரசின் ஒப்புதலுக்காக இருக்கிற திட்டங்களின் மதிப்பு 62 கோடி ரூபாய் ; ஆகவே 1967-க்குப் பிறகு நம்முடைய உணவு உற்பத்தியின் இலக்கைக் கணக்கிட்டுப் பார்த்தாலே இந்தப் பாசன வசதியை நாம் எந்த அளவிற்குப் பெருக்கியிருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

7-வது அம்சம்

"நிலநீர்—பாசன வசதியைப் பெருக்குதல் — வறட்சியால் தாக்குண்ட பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதல் —நிலநீர் பற்றி மேற்கொண்டு ஆய்வு செய்தல்"—இதுவும் மிக முக்கியமான திட்டங்கள்தான் ; இதை நாங்கள் மனப் பூர்வமாக வரவேற்கிறோம். இந்தியா முழுவதும் எடுத்திருக் கிற கணக்கின்படி நிலநீர் வளம் உள்ள பரப்பு 21 கோடியே 36 இலட்சம் ஏக்கர். அதிலே தமிழ் நாட்டில் நிலநீர் வளம் உள்ள பரப்பு ஒரு கோடியே பதினைந்து இலட்சம் ஏக்கர். இது இந்தியாவின் மொத்தப் பரப்பில் ஐந்தே ஐந்து சதவிகி தம்தான். ஆனால் இந்தியா முழுவதும் உள்ள மின் இணைப்புப் பெற்ற பாசனக் கிணறுகள் 24.35 இலட்சம். தமிழ்நாட்டில் மின் இணைப்புப் பெற்ற பாசனக் கிணறுகள் 7.15 இலட்சம். இது இந்தியாவில் உள்ள மொத்தத்தில் முப்பது சதவிகிதம்.

நிலநீர் கிடைக்கின்ற இந்தியாவில் மொத்தப் பரப்பில் நாம் ஐந்து சதவிகிதம் ; ஆனால் நிலநீரைப் பயன்படுத்துகின்ற பம்பு செட்டுகளில் இந்தியாவின் மொத்தக் கணக்கில் நாம் 30 சதவிகிதம்.

அது மாத்திரமல்ல ; பிரதமர் அறிவித்திருப்பதைப் போல, "வாட்டர் அட்லாஸ்" தமிழ் நாட்டில் மாவட்ட வாரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் நிலநீர் ஆய்வுக்காக இதுவரை செலவழிக்கப்பட்டிருக்கிற தொகை 7.5 கோடி ரூபாய். இந்தப் பணிக்கெல்லாம் மத்திய அரசின் சார்பில் எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை.

குடிநீர் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். குடிநீருக்காக மாத்திரம் 1967-க்குப் பிறகு — பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஊராட்சி மன்றங்களின் மூலம் செலவழிக்கப்பட்ட தொகை பதினெண்கு கோடியே பதினைந்து இலட்சம் ரூபாய். தோண்டப்பட்ட கிணறுகள் முப்பத்து மூவாயிரம் ; கட்டப் பட்ட தொட்டிகள் நான்காயிரத்து நானூறு.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் —இந் தியாவில் இப்படிப்பட்ட அமைப்பு எங்குமில்லை — தமிழ் நாட்டில்தான் இப்படியொரு அமைப்பை 1971-லேயே

உருவாக்கி — அதன் சார்பில் 1971-க்குப் பின் நிறைவேற்றிய திட்டங்கள் 7,736. இதற்கான செலவு ஏறத்தாழ பன்னிரண்டு கோடி ரூபாய்.

வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காக மாத்திரம் குடிநீர் வழங்கு திட்டத்தின் கீழ் வராத செலவழித்த தொகை மூன்று கோடியே ஐம்பது இலட்சம்; திட்டத்தின் வாயிலாக 1975—76-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டது ஏழு கோடியே பத்து இலட்சம். ஆக இந்தப் பணிகளும் இருபது அம்சத் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பே தொடர்ந்து நம் முடைய தமிழக அரசால் நிறைவேற்றப்பட்டு வருகிற திட்டங்களாகும்.

8-வது அம்சம்

பிரதமர் அறிவித்த எட்டாவது திட்டம் — "2,600 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டு மின் உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்தப் போது மான நிதி ஒதுக்கீடு செய்யப்படும். நீண்டகாலத் தேவை களை நிறைவு செய்ய மத்திய அரசுத் துறையில் பெரிய அள வில் அனல் மின் நிலையங்கள் நிறுவத் திட்டமிடப்படும். மாநில மின்சார வாரியம் சீரமைக்கப்படும்"—இது பிரதம ருடைய அறிவிப்பில் மிக முக்கியமான அம்சம்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் மிகப் பெரும் பிரச்சினை உள்ள அம்சம் இது. 2,600 மெகாவாட் உற்பத்தி செய்கிறார்கள் என்ற ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த நிதியாண்டில் — 1975—76-இல் இந்தியா முழுமைக்கும் மின் உற்பத்திக்காக மத்திய அரசு ஒதுக்கியிருக்கிற தொகை 250 கோடி. தூத்துக்குடியில் இருக் கிற நமது மின் நிலையத்திற்கு மொத்த மதிப்பீடு 129 கோடி ரூபாய். 1974—75-இல் ஐந்து கோடி ரூபாய் அள விற்குச் செலவிட்டிருக்கிறோம். 1975—76-இல் 18·67 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்திருக்கி றோம். மாநில நிதியிலிருந்து அதற்குப்பத்து கோடி ரூபாய் போட்டுவிட்டோம். மீதி 8.67 கோடியை மத்திய அரசிடம் இருந்து கேட்டிருக்கிறோம். இந்தத் திட்டம் முழுமையாக ஆகவேண்டுமேயானால், 1975—76-இல் 18.67 கோடியும், 1976—77-இல் 53 கோடியும், 1977—78-இல் 30.5 கோடி யும், 1978—79-இல் 17.5 கோடியும், 1979—80-இல் 4.5 கோடியும் செலவழித்தால்தான் இந்தத் திட்டம் 1979—80ல் முடிவடையும்.

இந்தியா முழுமைக்கும் 250 கோடி என்று பெருந் தொகையை அறிவித்திருக்கிறார்களே, அதில் பல முறை

நாம் கேட்ட பிறகு ஒரு கோடி ரூபாய்தான் இந்த இருபது அம்சத் திட்ட அறிவிப்பிற்குப் பிறகு இந்த 250 கோடி ரூபாயில் ஒதுக்கியிருக்கிறார்கள்.

இதைத்தான் நண்பர் சுப்பு நேற்றுப் பேசும்போது ஏட்டளவில் வெகு அழகாக எழுதிக் காட்டிவிடுகிறீர்கள்; நிறை வேற்ற பணம் எங்கே? என்று கேட்டார். இருபத்தோராவது அம்சம் ஒன்று வேண்டாமா? இருபது அம்சத் திட்டத்தைச் சொல்லிவிட்டு, 21-வது அம்சமாக இவ்வளவு கோடி ரூபாய் இதையெல்லாம் செலவழிக்க ஒதுக்கி யிருக்கிறோம் என்று சொல்லியிருக்க வேண்டாமா?

இந்தியா முழுமைக்கும் 250 கோடி ரூபாய் ; அதிலே தமிழ்நாட்டிற்கு மின் உற்பத்தியைப் பெருக்க ஒரேயொரு கோடி ரூபாய்தான்!

நெய்வேலி எவ்வளவு ஆண்டுக் காலமாகத் தவம் கிடக்கின்றது? பக்தவத்சலம் காமராசர் ஆகியோர் ஆண்டகாலத்தில் தொடங்கப்பட்டு இரண்டாவது சுரங்கம் வெட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டு, அப்போது தொடங்கியிருந்தாலே இப்போதுதான் முடிந்திருக்கும் ; அப்படி ஏழெட்டாண்டுகள் ஆகும். ஆனல் இன்னும் தொடங்கவே இல்லே. நாளேக்குத் தொடங்கினுல் கூட இன்னும் ஏழாண்டுக் காலம் ஆகும்.

இதற்கிடையில் ஆந்திராவில் இருக்கிற ராமகுண்டத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளலாமா என்கிற ஒரு பயங்கரப் பிரச்சினை எழுந்திருக்கிறது. இந்தச் செய்தி கேள்விப்பட்டதும் நான் பிரதமருக்கு எழுதியிருக்கிறேன். ''நீங்கள் நெய்வேலியைக் கைவிட்டுவிட்டு, ஆந்திராவில் ராமகுண்டத் திட்டத்தை எடுத்துக் கொள்வீர்களேயானுல் தமிழ் நாட்டில் மின் உற்பத்தியில் பெரிய இடைவெளி விழ நேரிடும். ஆகவே ராமகுண்டத் திட்டத்தைக்கைவிட்டுவிட்டு நெய்வேலித்திட்டத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் ; இரண்டாவது சுரங்கம் அமைத்துவிட வேண்டு''மென்று கேட்டிருக்கிறோம். இது மின்சாரத்தையும் பொறுத்த வரையில் எட்டாவது அம்சமாகும்.

9-வது அம்சம்

கைத்தறியாளர்களுக்கு சில ரகங்களை ஒதுக்க வேண்டும்; இது கைத்தறியாளர்களுடைய பிரச்னை; இது ஏற்கனவே இந்த மாமன்றத்தில் பல நேரங்களில் விவாதிக்கப் பட்டிருக்கிறது.

1974-ஆம் ஆண்டு நூல் விலையேற்றம் ஏற்பட்டபோது, பன்னிரண்டு நூற்பாலைகளிலிருந்து கிடைத்த உற்பத்தியைக் கொண்டு நெசவாளர்களுக்குப் பதினுறரைக்கோடி ரூபாய் மதிப்புள்ள நூலை கோவாப்டெக்ஸ், தமிழ்நாடு கைத்தறி நூல் கழகம் ஆகிய நிறுவனங்களின் மூலம் தமிழக அரசு வழங்கித்தன்னுல் முடிந்த அளவில் கைத்தறியாளர்களுக்கு நன்மையைச் செய்திருக்கிறது.

கைத்தறியில் இப்பொழுது சில ரகங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்று பிரதமர் அறிவித்திருக்கிறார். இது புதிய திட்டமா என்றுல் இல்லை. அவர்கள் அறிவிப்பில் கூட பிரதமர் மிகுந்த பெருந்தன்மையோடு சொல்லியிருக்கிறார்கள்.

Some of them are new; others were set forth earlier but require to be pursued with greater vigour and determination.

(அவற்றில் சில புதியவை ; மற்றவை முன்பே எடுத்துக் கூறப்பட்டவை ; ஆனுல் மிகுந்த உறுதியோடும் வலிவோடும் அமுலாக்கப்பட வேண்டியவை).

என்று பிரதமரே சொல்லியிருக்கிறார்கள். இது முனைப் பாக நடைபெற வேண்டும் என்பதற்காக இதை அறிவித்து இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். இதிலே எந்த விதமான வேறுபாடும் எனக்கில்லை.

ராஜாஜி அவர்கள் இந்த மாமன்றத்திலே பொறுப்பேற் றிருந்த அந்தக் காலத்திலேயே கைத்தறித் துணிக்குச் சில ரகங்களை ஒதுக்க வேண்டும்; கரை போட்ட வேட்டி, சேலைகள் ஒதுக்கப்பட வேண்டுமென்று ராஜாஜி காலத்திலே போட்டு — ராஜாஜிக்கு நினைவாலயம் எல்லாம் எழுப்பி — அவருடைய மறைவிற்குப் பிறகு இரண்டு நினைவு நாள் கூட கொண்டாடி — இப்பொழுது கைத்தறிக்கு ரிசர்வேஷன் வேண்டும்; அதற்கு என்று சில ரகங்களை ஒதுக்க வேண்டும் என்று பிரதமர் அறிவித்திருக்கிறார். இதே சட்ட மன்றத்தில் 1974-ல் ஏகமனதாக கைத்தறிக்குச் சில ரகங்களை ஒதுக்க வேண்டும் என்ற தீர்மானம் நம் அனைவராலும் நிறைவேற்றப் பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இப்போதாவது அவர்கள் செய்ய முன்வந்திருக்கிறார் கள். 'ஸ்டாண்டர்டு க்ளாத்' மலிவுத் துணி பற்றிக் கூட என்னிடம் ஹக்சர் அவர்கள் கேட்டார்கள். அதைப்போலவே அந்தத் துறையின் அமைச்சர் சட்டோபாத்தியாயா என்னிடம் பேசும்போது இதைப்பற்றிக்கேட்டார். ''ஸ்டாண்டர்டு க்ளாத் மில் துணிகளுக்கு ஒதுக்குவதைப் பற்றி என்ன நினைக்கிறாய்?''

என்று கேட்டார்கள். நான் திட்டவட்டமாக, "கைத்தறி, கதர் இரண்டும் அழிந்துவிடும் ; ஸ்டாண்டர்டு க்ளாத்தை மில் துணிகளுக்கு நீங்கள் ஒதுக்குவீர்களேயானால்"— என்று இந்த அறிவிப்பெல்லாம் வருவதற்கு முன்பு அவசர நிலைப் பிரகடனத்திற்கு முன்பு அவர்களிடம் விவாதிக்கும் போது திட்டவட்டமாக நம்முடைய அரசின் சார்பில் அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன்.

அதைச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு மத்திய அரசுக்குத்தான் இருக்கிறதே அல்லாமல், மாநில அரசுக்கு எதுவுமில்லை.

10-வது அம்சம்

"நகர்ப்புற உச்ச வரம்பு — நகர்ப்புறங்களில் அமைந்துள்ள நிலத்தை சமூக உடைமையாக்கவும் நகர்ப்புற அனுபோக உரிமைக்கு உச்சவரம்பு விதிக்கவும் சட்டம் கொண்டு வரப்படும்." இது பிரதமருடைய பத்தாவது அறிவிப்பாகும். நகர்ப்புறச் சொத்து உச்ச வரம்பை வெளியிட்ட அந்தக் காலத்திலேயே நாம் அதை வரவேற்றிருக்கின்றோம். மத்தியப் பிரதேசத்தின் முதலமைச்சர் என்று கருதுகிறேன். திரு. சேத்தி அவர்கள் இதை அறிவித்தார். நகர்ப்புற உச்ச வரம்பை என்னுடைய மாநிலத்திலே கொண்டு வரப்போகிறேன் — கொண்டு வந்துவிட்டேன் என்றெல்லாம் அறிவித்தார். என்னை அதுபற்றி டெல்லியிலும், சென்னையிலும் நிருபர்கள் கேட்டபோது, "இது கவர்ச்சிகரமான நல்ல கோஷம் : நடைமுறைக்கு எப்படி வரும் என்று தெரியாது" என்று சொன்னேன்.

இந்த உச்ச வரம்பில் என்னென்ன பிரச்சினைகள் வருமென்றால் நகரில் உள்ள காலி மனைகள் கையிருப்பைக் கட்டுப்படுத்தி வைப்பதா? இந்தக் கேள்விக்கு நாம் பதில் காண வேண்டும்: கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையைப் பொறுத்து உச்சவரம்பு விதிப்பதா? அல்லது வீடுகளோ அத்தகைய காலி மனைகளோ இருக்கக்கூடிய இடத்தின் சொத்து மதிப்பை வைத்து அதன் அளவைக் கட்டுப்படுத்துவதா? என்கிற இந்தப் பிரச்சினைகள் எழுகின்ற நேரத்தில் இந்த உச்சவரம்புச் சட்டத்தை எப்படி அமுல்படுத்துவது என்ற குழப்பம் ஏற்படும்.

அதனால்தான் இன்னும் மத்திய அரசின் சார்பில் எந்த முடிவையும் அவர்கள் எடுக்காமல் இருக்கிறார்கள் என்று கருதுகின்றேன். ஆனால் அப்படி ஒரு முடிவை அவர்கள் எடுக்கின்ற நேரத்தில் அவர்களுக்கு அனுசரணையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த அரசின் சார்பில் நகர்ப்புறச் சொத்து வரியை ஒரு மசோதாவாக — அவசரச்

சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள் தருகின்ற கருத்துக்களை எல்லாம் கலந்து பேசி உருவாக்கியிருக்கிறோம்.

அதன்படி யார் யாருக்கு எவ்வளவு சொத்து என்ற அந்த அளவெல்லாம் தெரிந்து விடுமானால் பிறகு மத்திய சர்க்கார் அந்த உச்ச வரம்பைக் கொண்டு வருவதற்கு ஏற்ப நாம் இப்போதே அவர்களுக்கு வழி முறைகளைத் தேடித் தருகிறோம்; இது எந்த மாநிலத்திலும் செய்யவில்லை: இந்த பத்தாவது அம்சத்தை மற்ற மாநிலங்களிலே இல்லாமல் நம்முடைய மாநிலத்தில்தான் அவர்கள் நிறைவேற்றுவதற்கேற்ப அடிப்படையை அமைத்துக் கொடுக்கிறோம். அது விரைவில் சட்ட மன்றத்தில் வரவிருக்கிறது.

11-வது அம்சம்

"நகரச் சொத்தைக் குறைத்து மதிப்பீடு `செய்தலைத் தடுக்கச் சொத்துக் கணக்குகளை மதிப்பீடு செய்ய ''ஸ்பெஷல் ஸ்குவாட்'' வருமான வரி ஏய்ப்போர் மீது கடும் தண்டனை''—இது பிரதமர் அவர்கள் அறிவித்த இன்னொரு திட்டம்.

நம்முடைய சட்ட மன்றத்தில் 1973-ஆம் ஆண்டிலேயே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். கே.டி.கே. அவர்கள்தான் இப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவீர்களா என்று கேட்டார். நிறைவேற்றினால், நீங்கள் ஆதரிப்பீர்களா என்று கேட்டேன். மார் தட்டி நிச்சயமாக ஆதரிப்பேன் என்று சொன்னார். நாங்கள் எல்லாம் கே. டி. கே. ஆதரித்து விட்டால் மத்திய அரசு நிச்சயமாக அதனை ஏற்றுக் கொள்ளும் என்று நாம் ஒரு தீர்மானத்தை இங்கே நிறைவேற்றினோம். ''நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார முறை கேடுகள், விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகியவற்றிற்குக் கறுப்புப் பணத்தின் புழக்கமே முக்கியக் காரணம் என்பதை இந்தச் சட்டப் பேரவை எடுத்துக் காட்டியுள்ளது. கறுப்புப் பணத்தைக் கண்டுபிடித்து வெளிக்கொணர வாஞ்சு குழு தெரிவித்த பரிந்துரைகளில் கண்டுள்ளபடி மத்திய அரசுக்குள்ள அதிகாரங்கள் மாநில அரசுக்கும் — மாநில அரசுக்கு மட்டுமல்ல; மத்திய அரசுக்கும் என்று இரண்டு அரசுகளுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று இந்த மன்றம் வலியுறுத்தியுள்ளது'' என்ற தீர்மானத்தை நாம் 1973-ஆம் ஆண்டிலேயே நிறைவேற்றி இந்தப் பதினோராவது அம்சத்திற்கு அப்போதே அச்சாரமாக நம்முடைய ஒப்புதலை அளித்திருக்கிறோம். ஆகவே இதிலும் பிரச்சினை இல்லை.

12-வது அம்சம்

அடுத்து, தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கும் — மூலதனத்தில் ஆதாயமும் வழங்கும் திட்டம். இது பிரதமர் அறிவித்த மற்றொரு திட்டம். இந்தத் திட்டத்தை 1973-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து நாம் நடைமுறைப்படுத்த வலியுறுத்தி வருகிறோம். இதற்கான ஒப்புதல் 1973-ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசிடமிருந்து கிடைக்கவில்லை. கிடைத்ததெல்லாம், 'இது பாராட்டப்பட வேண்டிய ஒரு நடவடிக்கை' என்று ஒரு கடிதம் தான்; ஆனால் 1973லிருந்து 1975 வரையில் எந்தவிதமான ஒப்புதலும் கிடைக்காமல் இதை இப்போது பிரதமர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

கதாசிரியராக இருந்த அனுபவத்தில் ஒன்றைச் சொல்வேன்; கதைகளை எழுதி யாரிடமாவது கொடுத்தால், அந்தக் கதாசிரியர் அதை யார் கொடுத்தார்கள் என்று சொல்லாமல் தங்கள் பெயரில் வெளியிடுவது — அதைப் போல இந்தத் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பும், இலாபத்தில் பங்கும் வழங்குகின்ற இந்தத் திட்டத்தை நாம் 1973-ஆம் ஆண்டு மார்ச் மாதம் அறிவித்து, மத்திய அரசிடம் இதற்கான ஒப்புதலைக் கேட்டோம்.—இதிலே கே. டி. கே. அவர்கள் கூட முதலீடு செய்வது கூடாது என்று சொன்னார். முதலீடு செய்தால் தொழிலாளர்கள் நஷ்டத்தில் பொறுப்பு ஏற்க வேண்டிய அவசியமில்லை. இலாபத்தில் அவர்களுக்குப் பங்கு; அதிக முதலீடு செய்யத் தேவையில்லை; இதிலே ஒரேயொரு சிக்கல் என்னவென்றால் வருமான வரி கொடுத்த பிறகு 'டிவிடெண்ட்' பிரிக்கக் கூடாது; 'டிவிடெண்ட்' பிரித்த பிறகு வருமான வரி கொடுக்க வேண்டும். அப்போதுதான் தொழிலாளர்களுக்குத் தொகை அதிகமாகக் கிடைக்கும். இதற்குத் தக்க வகையில் உங்களுடைய கம்பெனி 'ஆக்ட்'டைத் திருத்திக் கொடுங்கள் என்று மத்திய அரசைக் கேட்டோம்.

1973-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே நாம் இதை நிறைவேற்றத் தொடங்கி யிருக்கிறோம். ஆகவே நிறைவேற்றத் தொடங்கிவிட்டோம் என்பது ஒரு குற்றமாகாது.

13-வது அம்சம்

"ஏழை மாணவர்கள் படிக்கும் மாணவர் இல்லங்கள், அவர்கள் தங்கும் விடுதிகள் ஆகியவற்றுக்கு இன்றிய

யையாப் பொருள்கள் கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்படும்'' —இது பிரதமர் அவர்களுடைய பதின்மூன்றுவது அம்சம்.

தமிழ் நாட்டில் அரிசனங்கள், மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்காக உள்ள இல்லங்கள் —570. அதிலே படிக்கும் மாணவர்கள் — 35,782. பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கான இல்லங்கள் —231. அதிலும் பயிலும் பின்தங்கிய மாணவர்கள் 16,332.

இந்த இல்லங்களில் அவர்களுக்கு வேண்டிய இன்றியமையாப் பொருள்கள் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகக் கட்டுப்பாடு விலையில்தான் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே தொடர்ந்து இதை நாம் பல ஆண்டுக் காலமாகச் செய்து வருகிறோம். ஆகவே இது ஒன்றும் நாம் நிறைவேற்ற மறுப்பதல்ல!

14-வது அம்சம்

''பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு நியாய விலையில் பாட நூல்கள், எழுது பொருள்கள் வழங்குதல்; விலைகள் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப்படுதல்; புத்தக வங்கிகள் அமைத்தல்''—இது பிரதமர் அவர்களுடைய பதினான்காவது அம்சம்.

கே.டி.கே. அவர்கள் கூட இந்தப் புத்தக வங்கிகள் அமைக்கப்பட்டு, புத்தகங்கள் வெளியிடுவது நாட்டுடமை ஆக்கப்பட்டிருப்பதை மனம் திறந்து பாராட்டினார். பாராட்டி விட்டு விலைகள் கொஞ்சம் அதிகமாக இருக்கின்றன அது குறைக்கப்பட வேண்டும் என்று சொன்னார். நான் அதற்கு விளக்கம் தர விரும்புகிறேன்.

இந்த இருபது அம்சம் அறிவிக்கப்படுவதற்கு முன்பு தமிழ்நாடு அரசு மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்களைத் தனியார் துறையில் இல்லாமல் அரசுத் துறையிலேயே ஒரு நூல் வெளியீட்டகம் அமைத்து, அதன் மூலமாக வழங்கவேண்டும் என்ற முறையை அமைத்திருக்கிறதா இல்லையா என்பதைத் தயவுசெய்து மாற்றுக் கட்சியில் உள்ளவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அது ஏற்கனவே அமைக்கப்பட்ட ஒன்று; ஆகவேதான் அதை நிறைவேற்றி முடித்துவிட்டோம் என்று கூட தைரியமாகச் சொன்னேனே.

விலை குறைக்கப்பட வேண்டாமா? என்று கே.டி.கே. கேட்டார். கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் கல்வி

மானியத்தில் பேசும்போது அதுபற்றி நிறைய விளக்கங்களை எல்லாம் தந்திருக்கிறீர். மத்திய அரசு விலைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடைபெற்றிருக்கிற குறைபாட்டைப்பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். மலிவு விலையில் அச்சுத் தாள்களைப் பெற்றுப் பாடநூல்களை வெளியிடும் தனியார் நிறுவனங்கள் அடக்க விலையைப்போல் மூன்று மடங்கு அதிகமான விலைக்கு விற்பதற்கு அனுமதி கோரி, அதற்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது. இதை மனதில் வைத்துக் கொண்டு நாம் இந்தப் பிரச்சினையில் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

ஆண்டுதோறும் பதினெட்டு இலட்சம் மாணவர்களுக்கு மூன்றுவது வகுப்பு வரை படிப்பவர்களுக்குப்பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குகின்றோம். இதற்காக இது வரை ஆகியிருக்கிற மொத்தச் செலவு 86 இலட்சம் ரூபாய்.

விலை அதிகம் என்று சொன்னார்கள். என்னுடைய கையில் இருக்கிற இந்தப் புத்தகம் 'ரிசார்ட்சன் லிவிங்ஸ்டன் —சம் டாஸ்க் ஃபார் எஜூகேஷன்' என்கிற இந்தப் புத்தகத்தின் பக்கங்கள் 88; இதனுடைய விலை ரூபாய் 5; இது தனியார் வெளியிட்டு இருக்கிற புத்தகம்; அடுத்து, இந்தப் புத்தகம் ''அறிவியல்''! நம்முடைய தமிழ் நாடு பாடநூல் நிறுவனம் தயாரித்தது. இது 386 பக்கங்கள் கொண்டது இதனுடைய விலை ரூ. 4.80.

88 பக்கங்கள் கொண்ட தனியார் புத்தகம் 5.00 ரூபாய்.

386 பக்கங்கள் கொண்ட நம்முடைய புத்தகம் ரூ. 4.80 காசு.

இந்தியாவில் கூட பல மாநிலங்களில் நூல்களை வெளியிடுவது தேசிய மயமாக ஆக்கப்பட்டிருக்கிறது. புள்ளி விவரத்தைப் பார்த்தால் ராஜஸ்தானில் ஒரு பக்கத்திற்கு 1.08 காசு என்றும் —குஜராத்தில் 2 காசு என்றும் — ஹிமாசலப் பிரதேசத்தில் நான்கு காசு என்றும் விலையாகிறது. தமிழ் நாட்டில் ஒரு காசுதான் ஆகிறது.

இந்தியாவில் தமிழ்நாட்டுப் புத்தகங்கள்தான் மிகக் குறைவான விலைக்குத் தரப்படுகிறது என்ற விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

15-வது அம்சம்

"அடுத்து, படித்த இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சித் திட்டத்தின்கீழ் பயிற்சி தருதல்''—இது பிரதமர் அறிவித்த பதினைந்தாவது திட்டம்.

நம்முடைய அமைச்சர் ராசாராம் அவர்கள் 107 சத விகிதத்தைத் தாண்டி விட்டோம் என்று அறிக்கை கொடுத் திருந்தார்; எனக்கே கூட எப்படி இது 107 சதவிகிதம் என்று ஆச்சரியமாக இருந்தது. புள்ளி விவரங்களை எடுத்துப் பார்த்தால் தனியார் துறையில் 4,264 இடங்களும், மாநில அரசுத் துறையில் 2,123 இடங்களும், ஆக மொத்தம் 6,287 இடங்களும் பயிற்சியாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக் கிறது. அதாவது, 107.45 சதவிகிதம் நாம் வரையறுத்த இலக்கையும் மிஞ்சி படித்த இளைஞர்களுக்குப் பயிற்சித் திட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது.

16-வது அம்சம்

"அடிமைத் தொழிலாளர் முறை ஒழிக்கப்பட வேண்டும்"—தமிழகத்தைப் பொறுத்த வரையில் அது இல்லை என்று நாம் வாதிக்கிறோம். ஓரிரு இடங்களில் இருப்பதாகச் சொல்லப்பட்டாலும், அதற்கு இன்றைக்கு மத்திய அரசு அவசரச் சட்டம் கொண்டுவந்துவிட்டது. எங்கேயாவது ஒன்றிரண்டு தலைகாட்டினாலும் நிச்சயமாக அது ஒழிக்கப் படும்; அதில் நமக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை.

17-வது அம்சம்

"கடத்தல்காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்குத் தனிச் சட்டம் கொண்டு வரப்படும்"—இது மத்திய அரசு கொண்டு வரவேண்டியதாகும். ஆகவே கண்டனத் தீர்மானம் அங்கே வர வேண்டும். இங்கே கொண்டு வருவது பொருத்தமல்ல.

18-வது அம்சம்

"மதுவிலில் முதலீடு செய்வதற்கான இப்போது உள்ள முறைகளைத் தளர்த்தி, இறக்குமதி வரிசென்னை தவ றுகப் பயன்படுத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல்"—இதிலே கம்யூனிஸ்ட் கட்சிக்குச் சில அபிப்பிராய பேதங்கள் உண்டு என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் கூட, இது மத்திய அரசு எடுக்க வேண்டிய முயற்சி என்பதை இந்த மாமன்றம் நன்கு உணரும். ஆகவே இதிலும் தமிழ்நாடு அரசுக்கு எந்தவிதமான பொறுப்பும் இல்லை."

19-வது அம்சம்

"சாலைப் போக்குவரத்துக்கான தேசிய அனுமதிச் சீட்டு அளிக்கும் திட்டம். இதில் தமிழ் நாடு அரசு ''மாநிலத்தின் உரிமைகள் பறிபோகாமல் பரர்த்துக் கொள்ளுங்கள்; இதை ஆதரிக்கிறோம்'' என்று ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம். இப்போது ஏதோ 5,700 பர்மிட் லாரிக்கு என்று மொத்தமாக அறிவித்திருக்கிறார்கள். அதில் தமிழ்நாட்டிற்கு 200 என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவரையில் சர்க்காருக்கு எதுவும் உறுதியாக — திட்டவட்டமாகக் கிடைக்கவில்லை. அதுபற்றி அந்தத் துறை அமைச்சர்கள் எல்லாம் கலந்துபேசி முடிவெடுப்பார்களோ என்னவோ தெரியவில்லை. இதுவும் மத்திய அரசு செய்து முடிக்க வேண்டிய ஒருகாரியம்.

20-வது அம்சம்

"தனி நபரின் வருமானத்தின் மீது விதிக்கப்படுகின்ற வருமான வரியின் வரம்பை ஆண்டு ஒன்றுக்கு ஆறுயிரத்திலிருந்து எட்டாயிரமாக உயர்த்தப்படும்'' இது இருபதாவது அம்சம்; இதிலும் நமக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

ஆக, இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்று கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தீர்களே, அதில் நான்கைந்தையாவது குறைத்துவிட்டுப்பதினைந்து அம்சத்தை நிறைவேற்றவில்லை என்றல்லவா கொண்டு வந்திருக்க வேண்டும். மத்திய அரசின் பொறுப்பு என்னென்ன, மாநில அரசின் பொறுப்பு என்னென்ன என்பதைக் கூடப் புரிந்து கொள்ளாமல், மொத்தமாக இருபது அம்சத்தையும் நாங்கள் நிறைவேற்றவில்லை என்று நீங்கள் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தது பொருத்தமல்ல; என்னிடம் காட்டியிருந்தால், உங்கள் தீர்மானத்தைத் திருத்திக்கூடக் கொடுத்திருப்பேன். அதை நீங்கள் செய்யவில்லை.

நான், முதலில் பத்து அம்சத் திட்டம்தான் இப்போது இருபது அம்சத் திட்டமாகப் பெருக்கெடுத்தது என்பதை எடுத்துச் சொன்னேன். அதைப்பற்றி 'மெயின் ஸ்ட்ரீம்' என்ற பத்திரிகை—நம்முடைய கே.டி.கே. அவர்களுக்குத் தெரிந்த பத்திரிகை—இதனுடைய ஆசிரியர் நிக்கல் சக்ரவர்த்தி அவர்கள்—இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் என்று கூடத் தகவல்; சரியாக இருக்கும் என்றும் கருது

கிறேன். இல்லையென்றுல் இந்த நேரம் தங்கமணி மறுத்து இருப்பார்.

அந்தப் பத்திரிகையின் 13-வது ஆண்டு மலர் வெளி வந்திருக்கிறது. அந்த மலரில் தலையங்கம் வலது கம்யூனிஸ்ட் உறுப்பினர் நிக்கல் சக்ரவர்த்தி எழுதுகிறார். அவர் சொல் கிறார், இந்தத் திட்டங்களைப் பற்றி. . . .

" on the programmatic plane, there is noticeable advance. Form mere passing of party-level resolutions premosing reforms (and in this respect, too, one can of course claim progress from the Ten Points of 1967 to Twenty Points of 1975), there is all round exhortation by public leaders at different tiers of relevance, calling upon the flocks under their command to take up the implementation of the declared programme. 'From resolutions to exhortation marks a perceptible advance in commitment."

(நடைமுறையில் பார்த்தால் நல்ல முன்னேற்றம் என்று சொல்லலாம். கட்சி மட்டத்தில் சீர்திருத்தங்கள் பற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றுவதிலிருந்து அரசியல் தலைவர்கள் அனைவருமே திட்டங்கள் நிறைவேற்றுவதைப் பற்றிப் பேசுகிற நிலை ஏற்பட்டுள்ளது. 1967-ஆம் ஆண்டில் நிறைவேற்றப் பட்ட பத்து அம்சத் திட்டமாக இருந்தது, 1975-ல் இருபது அம்சத் திட்டமாக மாறி இருப்பதே ஒரு வளர்ச்சிதான். வெறும் தீர்மானங்களிலிருந்து மக்களை ஊக்குவிக்கக் கூடிய அளவிற்குப் பேசுகிற நிலைக்கு வந்தது ஒரு முன்னேற்றம்தான். தீர்மானங்களை வலியுறுத்திக் கூறிக் கொண்டிருப்பதால் புதியது தோன்றுவிட்டாலும் அது மக்களைத் தயார்ப்படுத்து கிறது. தீர்மானங்களை நிறைவேற்றுபவர்கள் தப்பிவிட முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு நாட்டின் தலைமையைப் பற்றியும் நாட்டின் பொருளாதார நிலைமையைச் சீர்செய்வது பற்றியும் இது ஒரு நம்பிக்கையைத்தான் ஊட்டுகிறது).

இந்த அளவிற்குக் கேலி புரிகின்ற இதனுடைய ஆசிரியர் இருபது அம்சத்தைப் பற்றி இன்னொரு இடத்திலே குறிப் பிடும்போது,

" Sri Subramaniam's plan for setting up rural banks, with the World Bank funds but without taxing the rural rich, deserves serious note of every patriotic Congressman. Those who think that the popularisation of the Twenty Point Programme is by itself a guarantee for socio-economic advancement to forget that the first party to welcome it within a couple of hours of its announcement, as progmatically realistic, was the Federation of Indian Chambers of Commerce and Industry, then already fortified by the Prime Miniter's official assurance against further nationalisation.'

(கிராமப் புறச் செல்வந்தர்களுக்கு வரி போடாமல் உலக வங்கியின் நிதியைப் பயன்படுத்திக் கிராம வங்கிகளை அமைக்கும் திரு. சுப்பிரமணியத்தின் திட்டம் உண்மையான தேசபக்தியுள்ள காங்கிரஸ்காரர்களின் கவனத்தைக் கவர வேண்டும். (சுப்பிரமணியம் யார் என்று தெரியவில்லை). இருபது அம்சத் திட்டமே சமூகப் பொருளாதார வளர்ச்சியினை உறுதியாக்கும் என்பவர் ஒன்றை உணர வேண்டும். ''தேசிய மயம் இனி இல்லை'' என்ற தலைமை அமைச்சரின் உறுதியால் வலிவுற்ற இந்திய வர்த்தகத் தொழில் பேரவைதான் இந்த இருபது அம்சத் திட்டத்தை வெளியிட்ட 2 மணி நேரத்திற்குள் வரவேற்றது என்பதை உணரவேண்டும்).

இவ்வாறு நிக்கல் சக்ரவர்த்தி அந்தப் பத்திரிகையிலே குறிப்பிட்டிருக்கிறார். இது ஒன்றே இந்த இருபது அம்சத் திட்டத்திற்கு எப்படிப்பட்ட வரவேற்பு சாதாரண மக்களின் சார்பாக அளிக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.


இருபது அம்சத் திட்டத்தைக் கையில் கொடுத்து விட்டு இவைகளை நிறைவேற்ற எந்தவிதமான நிதி ஆதாரங்களைப் பெருக்குகின்ற வழி வகைகளையும் சொல்லாமல், அல்லது சொல்வதற்கு முன் வராமல், மணலி அவர்கள் சொன்னதைப் போல, பாராளுமன்றத்தில் இதற்கு ஒரு பாராட்டுத் தெரிவித்தார்களே அல்லாமல், பாராளுமன்றத்தில் இந்த இருபது அம்சத் திட்டத்திற்கு இவ்வளவு நிதி ஒதுக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினார்களா?

அல்லது எல்லா முதலமைச்சர்களையும் அழைத்து, தேசிய வளர்ச்சிக் குழுவைக் கூட்டி, எந்தெந்த மாநிலத்தில் நிறைவேற்றப் போகிறீர்கள்? எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள்? இதுவரை செய்யப்பட்டவை எவை? செய்யப்பட வேண்டியவை எவை? என்றும் அதற்குத் தேவையான நிதி உதவி எவ்வளவு என்றும் கேட்டார்களா?

அது மாத்திரமல்ல; வானொலிப் பேச்சைத்தான் இருபது அம்சத் திட்டம் என்று நாம் எடுத்து வைத்துக் கொண்டு, ஆகா எவ்வளவு புரட்சிகரமான திட்டம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். நான் கேட்கிறேன். இப்போது படித்துக் காட்டிய திட்டத்தில் எது புரட்சி?

வானொலிப் பேச்சில் அம்மையார் அவர்கள் இனிமேல் தொழில்கள் தேசிய மயமாக ஆக்கப்பட மாட்டாது என்று குறிப்பிட்டார்கள். அதை ஏன் 21-வது அம்சமாகச்சேர்த்துக் கொள்ளவில்லை. சிலவற்றை மாத்திரம் தேர்ந்தெடுத்து இருபது அம்சம் என்று சொல்கிறோம். இது எப்படிப் புரட்சிகரமான திட்டமாகும்?


இருபது அம்சத்தில் பதினொன்று அல்லது பதினைந்து திட்டங்களை நிறைவேற்றத் தொடங்கிவிட்டு, ஒன்றிரண்டை


கருவினை கில்லாங்கி
用厂年
குடிநீர் வடிகால் வாரியம்
TAMIL NADU
WATER SUPPLY AND
DRAINAGE BOARD
சீர்மிகு குடிசைப் பகுதி மாற்று
மனிதன் சரிபாதி இதரவனைத் தாண்டோம்

நிறைவேற்றி முடித்துவிட்டு, இருபது அம்சத்திலே இல்லாத திட்டமாக–

ஐந்து ஆண்டுகாலமாக கிராமம் தோறும் நம்முடைய அதிகாரிகள் சென்று, மக்களுடைய குறைகளைக் கேட்கிற மனுநீதித் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற அரசைப் பார்த்து—அரசாங்க ஊழியர்கள் குடும்பப் பாதுகாப்புத் திட்டம்—எந்த மாநிலத்திலும் ஆரம்பிப்பதற்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டு — இத்திட்டத்தின்படி ஒன்றரை ஆண்டு காலத்தில் 2,200 அரசு ஊழியர் குடும்பங்களுக்கு பத்தாயிரம் ரூபாய் வீதம் வழங்கப்பட்ட இந்தத் திட்டத்தை இருபது அம்சத்திற்கு மேலாக செய்திருக்கிற இந்த அரசைப் பார்த்து, சமூக நலத் திட்டங்களிலே கண்ணொளி—ஊண முற்றோர் புதுவாழ்வு—விதவைகள் நல்வாழ்வு—அனைதைச் சிறுவர்களுக்கு இல்லங்கள்—என்று இவ்வளவையும் செய்து முடித்திருக்கிற இந்த அரசைப் பார்த்து—காந்தி வழியில் நாங்கள் நடக்கிறோம் என்பதற்கு அடையாளமாக காங்கிரஸ் காரர்களும் செய்யாத காரியத்தை தமிழகத்தில் மதுவிலக்கை இடையில் ஒத்தி வைத்தாலும் மீண்டும் நடைமுறைப்படுத்தி, பரிசு சீட்டை அறவே ஒழித்து, குதிரைப்பந்தயத்தை நிறுத்தி இப்படி பல அம்சங்களை நிறைவேற்றி வரும் இந்த அரசைப் பார்த்து கண்டனம் செய்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது.

குடிநீர் வாரியம் வேறு எந்த மாநிலத்திலே இருக்கிறது? குடிசை மாற்று வாரியம் இருக்கிறதா? ஆகவே கண்டிக்கிறோம் என்று சொன்னால் என்ன அர்த்தம்?



தமிழரசு

16—11—1975


இதழின்

இலவச

இணைப்பு

தமிழ்நாடு அரசு
ஆய்வக நூலகம்
சென்னை-18.

தமிழரசு



கலைச் சுரப்பு